***DEPOSITION OF WITNESS***

***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.144/2016 – P.W. 2 (LW6)***

| | |
|---|---|
| *Name* | கண்ணதாசன் |
| *Father/Husband's Name* | வீரையன் |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 51 |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.07.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன வைத்தியநாதனை எனக்கு தெரியும், எங்கள் தெருக்காரர்.

கடந்த 10 வருடங்களுக்கு முன்பு மன்னார்குடி பஸ் ஸ்டாண்டி அருகே சென்றுக்கொண்டிருந்த வைத்தியநாதனை தனியார் பேருந்து மோதி விபத்து ஏற்படுத்தியது. விபத்து தொடர்பாக நான் கேள்விப்பட்டேன். இது தொடர்பாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 07.03.2016 ம்தேதி எங்கள் தெருவை சேர்ந்த வைத்தியநாதன் காணாமல் போனது தொர்பாக மன்னார்குடி காவல் நிலையம் சென்றபோது அறிவிப்பு பலகையில் 72 வயது

மதிக்கதக்க பெரியவர் இறந்ததாக நாங்கள் பார்க்க அவர் வைத்தியநாதன் என்று கண்டோம். மேலும் 07.03.2016 ம் தேதி உழவர் சந்தை அருகே தனியார் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் அவர் இறந்து விட்டதாகவும் என்று போலீசார் சொல்லி தெரிந்து கொண்டேன் என்றும், இறந்தவர் உடல் மன்னார்குடி அரசு மருத்துவ சவகிடங்கில் இருந்ததாக போலீசார் சொல்லி கேள்விப்பட்டேன் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.